TNTV150008072025

<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்</u>

**முன்னிலை:** M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS),
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
குடவாசல்.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20-ஆம் நாள் திங்கட்கிழமை

<u>CC. No.83 of 2025</u>

<u>CNR No. TNTV15-000807 -2025</u>

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
குடவாசல் காவல் நிலையம்,
குற்ற எண். 212/2024 ----- குற்றமுறையிடுபவர்

- எதிர் -

ஜெகதீசன் (எ) ஜெகன், 40/2026,
த/பெ. ராஜேந்திரன்,
அய்யனார் கோவில் தெரு,
புதுத் தெரு,
வடகண்டம். ------ எதிரி

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No.83 of 2025 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by Sub-Inspector of Police, Kodavasal PS. in Cr.No.212/2024 |
| 3. | Name of the accused | R. Jagadeesan@Jagan |
| 4. | Father's Name | S/o. Rajendiran |
| 5. | Occupation | - |



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.20 14:48:52 +0530

<table>
<tr><td>6.</td><td>Residence</td><td colspan="3">Ayannar Kovil Street, New Street, Vadakkandam.</td></tr>
<tr><td>7.</td><td>Age</td><td colspan="3">28/2026</td></tr>
<tr><td>8.</td><td>Date of occurrence</td><td colspan="3">15.06.2024</td></tr>
<tr><td>9.</td><td>Date of complaint<br>Date of filing Charge sheet</td><td colspan="3">15.06.2024<br>15.06.2024</td></tr>
<tr><td>10.</td><td>Date of apprehension</td><td colspan="3">15.06.2024</td></tr>
<tr><td>11.</td><td>Date of release on bail</td><td colspan="3">27.06.2024</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td colspan="3">Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s 207 Cr.P.C.</td><td colspan="3">04.08.2025</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 12.08.2025 the accused questioned on substance of accusation U/s 386,506(ii) IPC. Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="6">15</td><td rowspan="6">Date of commencements of trial -The date of examination – in chief and cross- examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>25.11.25</td><td>25.11.25</td></tr>
<tr><td>PW2</td><td>25.11.25</td><td>25.11.25</td></tr>
<tr><td>PW3</td><td>24.03.26</td><td>-</td></tr>
<tr><td>PW4</td><td>24.03.26</td><td>-</td></tr>
<tr><td>PW5</td><td>16.04.26</td><td>16.04.26</td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused under section 313 of the code – Closed of trial</td><td colspan="3">17.04.2026</td></tr>
<tr><td>17.</td><td>Sentence on order</td><td colspan="3">முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு 386,506(ii) இதச-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளில் இருந்து எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு</td></tr>
</table>



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.20 14:48:57 +0530

| | | |
|---|---|---|
| | | 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 18. | Service of copy of Judgment or finding on accused | No. The Judgment was uploaded on CIS portal and made available in E-Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | இவ்வழக்கில் சி.பி.116/25 ல் ஆஜர்படுத்தப்பட்ட சுமார் 21 CM நீளம் உடைய நீள நிற பிளாஸ்டிக் கைப் பிடியுடன் கூடிய கத்தி ஒன்று மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வந்தும், குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் ஆஜராகியும், சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலினையிலிருந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

**அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்** :-

1. குடவாசல் காவல் சரகம் சேங்காலிபுரம் மாதாகோவில் தெருவை சேர்ந்த இவ்வழக்கின் வாதியும், சாட்சி -2 ம் கடந்த 15.06.2024 ந்தேதி 10.00 மணிக்கு தனது இருசக்கர வாகனத்தில் குடவாசல் வந்துக்கொண்டிருந்த போது சேங்காலிபுரம் ரோட்டில் உள்ள சுடுகாடு



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.20 14:49:02 +0530

அருகே சாட்சி 2 பார்த்திபன் சிறுநீர் கழிக்க சென்ற போது இவ்வழக்கின் எதிரியாகிய நீர் அங்கு நின்றுக்கொண்டு சாட்சி -1 னிடம் 500 ரூபாய் பணத்தை கேட்டும், அதற்கு தர மறுத்த சாட்சி 1 யை, எதிரி தன் இடுப்பில் வைத்திருந்த கத்தியை எடுத்து என் பேரைச்சொல்லாலே குடவாசல் போலிஸ் ஸ்டேசனே அலரும் நீ சத்தம் போட்டேன்னா இந்த கத்தியாலேயே குத்தி கொலை செய்து விடுவேன்னு மிரட்டி சாட்சி 1 னின் பாக்கெட்டில் இருந்து பணத்தை மிரட்டி பறித்தும் குற்றம்புரிந்துள்ளதால் எதிரி மீது சட்டப் பிரிவுகள் 386,506(ii) இதச ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக புரிந்துள்ளதாக இவ்வழக்கின் விசாரணை அதிகாரியால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்நீதிமன்றத்தால் மேற்படி குற்ற இறுதி அறிக்கையும், மற்ற ஆவணங்களையும் பரிசீலனை செய்து வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை அதனுடன் இணைந்த ஆவணங்களை பரிசீலினை செய்தபோது எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் வனைவதற்கு போதிய முகாந்திரம் இருந்த காரணத்தினால் எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 386,506(ii) இதச வின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி கூறி வினவியபோது எதிரிகள் தன் மீதான குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி இல்லை என கூறினார்கள். அதன் பின்னர் அரசுத்தரப்பில் சாட்சியமளிக்க உத்தரவிடப்பட்டது.



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.20 14:49:07 +0530

5. இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் அரசு தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது.

6. <u>இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெரும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு</u> :-

(i) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.1 அவரது சாட்சியத்தில், தான் தற்போது சேங்காலிபுரம் மாதா கோவில் தெருவில் குடியிருந்து டூவீலர் மெக்கானிக் வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், சுமார் 1 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் தனது சொந்த வேலையாக குடவாசல் காவல் நிலையம் வழியாக சென்ற போது குடவாசல் போலீசார் தன்னிடம் ஒரு தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றும், இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அந்த கையொப்பத்தை போலீசார் கேட்டதால் செய்து கொடுத்தேன் என்றும், அதிலுள்ள விபரங்கள் தனக்கு தெரியாது என்றும், **புகார் மனுவில் உள்ள தன்னுடைய கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், இவ்வழக்கின் 2 வது சாட்சியாக பார்த்திபன் தற்போது துபாய் நாட்டில் வேலை செய்து வருகிறார் என்றும், அவர் வருவதற்கு சுமார் 3 ஆண்டுகள் ஆகும் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(ii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.2 அவரது சாட்சியத்தில், தான் தற்போது சேங்காலிபுரம் மாதா கோவில் தெருவில் குடியிருந்து கம்பிபிட்டர் வேலை செய்து வருகிறேன் என்றும், அ.சா.1 ஐ தனக்கு தெரியும் என்றும், சாட்சி பார்த்திபனை தனக்கு தெரியும் என்றும், அவர் தற்போது துபாய் நாட்டில் உள்ளார் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும்,



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.20 14:49:12 +0530

இவ்வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(iii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.3 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் சேங்காலிபுரம் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன் என்றும், அ.சா.1 ஐ எனக்கு தெரியாது என்றும், ஆஜர் எதிரியை தனக்குத் தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் தன்னுடைய கையொப்பம் இல்லை என்றும், சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(iv) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.4 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் சேங்காலிபுரம் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன் என்றும், அ.சா.1 ஐ தனக்கு தெரியாது என்றும், ஆஜர் எதிரியை தனக்குத் தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் தன்னுடைய கையொப்பம் இல்லை என்றும், சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(v) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.5 அவரது சாட்சியத்தில், தான் தற்போது நன்னிலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 15.06.2024 ம் தேதி அன்று தான் குடவாசல் காவல்நிலையத்தில் நிலைய பொறுப்பிலிருந்தபோது ராயப்பன் மகன் சிலம்பரசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று காவல் நிலைய குற்ற எண். 212/2024 இதச சட்டபிரிவுகள் 386, 506(2) ன் கீழ் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், **(புகார் மனு அ.சா.ஆ 2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.)** என்றும், பின்னர் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வாதியை விசாரித்தபோது எதிரி அவர்களிடமிருந்து தப்பிக்க



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.20 14:49:17 +0530

முயன்ற போது எதிரியின் கையில் வைத்திருந்த கத்தி கீழே விழுந்தததை வாதி காவல் நிலையத்தில் புகாருடன் கத்தியையும் கொடுத்தார் என்றும், அந்த கத்தியானது சுமார் **21 செ.மீ. நீளமுடைய நீல நிற பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய கத்தி** என்றும், அதை அன்றைய தினமே 11.10 மணியளவில் சாட்சிகள் வினோத் மற்றும் சக்தி ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், **(கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.4 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.)** என்றும், பின்னர் அன்றைய தினமே 11.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் காந்தி, ஜெகன்நாதன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், **(பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 மற்றும் 6 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.)** என்றும், மேற்படி பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றும், பின்னர் சம்பவம் உண்மை என்று தெரிய வந்த நிலையில் எதிரியை தேடிவந்த நிலையில் எதிரி குடவாசல் பேருந்து நிலையம் அருகே நின்று கொண்டிருந்தவரை அன்றைய தினமே 13.30 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற அடைப்புகாவலுக்கு உட்படுத்தினேன் மேலும் எதிரி பயன்படுத்திய தடயப்பொருட்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து அது நீதிமன்ற வழக்கு சொத்தாக C.P. No. 116/2025 ஆக கோப்பில் எடுக்கப்பட்டுள்ளது என்றும், **(படிவம்.91 அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது, தடயப்பொருட்கள் சா.பொ.ஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.)** என்றும், இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரியின் செய்கையானது இதச சட்டபிரிவுகள் 386, 506(2) ன் கீழ் தண்டித்தக்க குற்றம் என கடந்த 30.11.2024 ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சிமளித்துள்ளார்.



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.20 14:49:21 +0530

7. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிகளை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரிகள் "பொய் சாட்சி" என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் "இல்லை" என்று கூறினார்கள். இவ்வழக்கில் கு.வி.மு.ச.பிரிவு 320-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

8. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

9. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிகள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

10. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கு சம்பவமானது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

11. இவ்வழக்கின் எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கில் சாட்சிகளிடம் காணப்படும் குறைபாடுகளை சுட்டிக் காண்பித்து அதனால் ஏற்பட்டுள்ள சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

12. **அரசு தரப்பு சாட்சியங்களை மதிப்பிடுதல்**:-

இவ்வழக்கின் அ.சா.1 கொடுத்த புகாரில், வாதியான சிலம்பரசன், குடவாசல் காவல் சரகம் சேங்காலிபுரம் மாதாகோவில் தெருவை சேர்ந்த இவ்வழக்கின் வாதியும், சாட்சி -2 ம் கடந்த 15.06.2024 ந்தேதி 10.00 மணிக்கு தனது இருசக்கர வாகனத்தில் குடவாசல் வந்துக்கொண்டிருந்த போது



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.20 14:49:26 +0530

சேங்காலிபுரம் ரோட்டில் உள்ள சுடுகாடு அருகே சாட்சி 2 பார்த்திபன் சிறுநீர் கழிக்க சென்ற போது இவ்வழக்கின் எதிரியாகிய நீர் அங்கு நின்றுக்கொண்டு சாட்சி -1 னிடம் 500 ரூபாய் பணத்தை கேட்டும், அதற்கு தர மறுத்த சாட்சி 1 யை, எதிரி தன் இடுப்பில் வைத்திருந்த கத்தியை எடுத்து என் பேரைச்சொல்லாலே குடவாசல் போலிஸ் ஸ்டேசனே அலரும் நீ சத்தம் போட்டேன்னா இந்த கத்தியாலேயே குத்தி கொலை செய்து விடுவேன்னு மிரட்டி சாட்சி 1 னின் பாக்கெட்டில் இருந்து பணத்தை மிரட்டி பறித்தும் எதிரி குற்றம் புரிந்துள்ளதாக புகார் அளித்துள்ளார்.

13. ஆனால், நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்த அ.சா.1 தனது முதல் விசாரணையில், தான் தற்போது சேங்காலிபுரம் மாதா கோவில் தெருவில் குடியிருந்து டூவீலர் மெக்கானிக் வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், சுமார் 1 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் தனது சொந்த வேலையாக குடவாசல் காவல் நிலையம் வழியாக சென்ற போது குடவாசல் போலீசார் தன்னிடம் ஒரு தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றும், இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அந்த கையொப்பத்தை போலீசார் கேட்டதால் செய்து கொடுத்தேன் என்றும், அதிலுள்ள விபரங்கள் தனக்கு தெரியாது என்றும், **புகார் மனுவில் உள்ள தன்னுடைய கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், இவ்வழக்கின் 2 வது சாட்சியாக பார்த்திபன் தற்போது துபாய் நாட்டில் வேலை செய்து வருகிறார் என்றும், அவர் வருவதற்கு சுமார் 3 ஆண்டுகள் ஆகும் என்றும் புகார் மனுவில் கூறியுள்ள சங்கதிகளுக்கு முற்றிலும் நேர் எதிரான சங்கதிகளை கூறி சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அவரது சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவின்றி முரண்பட்டதாக உள்ளது என்பதை தெளிவாக காண முடிகிறது. இவ்வாறு இருக்கையில், செவிவழி



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.20 14:49:30 +0530

சாட்சியான அ.சா.2 ம் மற்றும் பார்வை மகசர் சாட்சியான அ.சா.3 ம் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளனர். அவர்களை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்ட போதிலும், அரசு தரப்பில் அவருக்கு ஆதரவாக அவர்களிடமிருந்து எவ்வித சாட்சியமும் குறுக்கு விசாரணையில் பெறப்படவில்லை.

14. எனவே, அரசு தரப்பு வழக்கில் கூறியுள்ளவாறு எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்டதற்கோ, அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை புரிந்ததற்கோ போதிய முகாந்திரம் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியளிக்காத பட்சத்தில் அ.சா.5-ன் சாட்சியத்தை மட்டுமே வைத்துக்கொண்டு எதிரிகள் குற்றவாளி என்று கருதுவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. இவ்வழக்கின் ஆவணங்களை கவனமாக ஆராயும்போது, இவ்வழக்கில் உள்ள பிரச்சனை முற்றிலும் தனி நபர் தன்மையுடைய வினா சம்மந்தப்பட்டதாக இருக்கிறது என்பதையும், அரசுத் தரப்புக்கு சாதகமான நிலையில் முடிவினை எட்ட முடியாத நிலையில் இந்நிலையில், இவ்வழக்கை நடப்பில் வைத்திருப்பது ஒரு ஆடம்பரமே என்றும், இவ்வழக்கை முடிவுக்கு கொண்டுவருவதன் மூலம் நீதிமன்றத்தின் பெரும்சுமையை குறைப்பதுடன் நீதிமன்றத்தின் நேரத்தை சேமிப்பதிலும், அதனை அர்த்தமுள்ள வழக்குகளை மிகவும் நன்முறையில் தீர்வு காண பயன்படுத்தவும் இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

16. எனவே, இவ்வழக்கில் எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 386, 506(2)இதச வின் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படாததால்,



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.20 14:49:36 +0530

சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**உத்தரவு**

19. முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 386,506(ii) இதச வின் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

20. எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சி.பி.116/25 ல் ஆஜர்படுத்தப்பட்ட சுமார் 21 CM நீளம் உடைய நீள நிற பிளாஸ்டிக் கைப் பிடியுடன் கூடிய கத்தி ஒன்று மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணிணியில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.20 14:49:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. சிலம்பரசன் |
| அ.சா.2 | திரு. தேவேந்திரன் |

| | |
|---|---|
| அ.சா.3 | திரு.காந்தி |
| அ.சா.4 | திரு.ஜெகநாதன் |
| அ.சா.5 | திரு.கணேசன்- காவல் உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 15.06.2024 | புகார் மனுவில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 15.06.2024 | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | 15.06.2024 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 15.06.2024 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.5 | 15.06.2024 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.6 | 15.06.2024 | மாதிரி வரைப்படம் |
| அ.சா.ஆ.7 | 15.06.2024 | படிவம் 91 |

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:- இல்லை

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:-

சா.பொ.1- 21 செ.மீ.நீளமுடைய நீல நிற பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய கத்தி

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.20 14:49:45 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.

**வழக்கு சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | 15.06.2024 முதல் 27.06.2024 |
| 2. | குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 09.07.2025 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள் | 12.08.2025 | | |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | - | | |
| 5. | சாட்சிகள் விசாரணை | **Witness** | **Date of Chief** | **Date of Cross** |
| | | PW1 | 25.11.25 | 25.11.25 |
| | | PW2 | 25.11.25 | 25.11.25 |
| | | PW3 | 24.03.26 | - |
| | | PW4 | 24.03.26 | - |
| | | PW5 | 16.04.26 | 16.04.26 |
| 6. | கு.வி.மு.ச. பிரிவு 313-ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 17.04.26 | | |
| 7. | எதிரி தலைமறைவு காலம் பற்றிய விபரம் | - | | |
| 8. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விபரங்கள் | - | | |

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.20 14:49:49 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.